# தத்து எடுப்பு பத்திரம்

## (DEED OF ADOPTION)

201_______ம் வருடம் ______ மாதம் _____ம் நாள் ______________________ விலாசத்தில் வசிக்கும் திரு._________ அவர்களின் குமாரர் சுமார் ___ வயதுள்ள திரு. _________ (அடையாள அட்டை______ கைபேசி எண்._______ ) மற்றும் திரு._________ அவர்களின் மனைவி சுமார் வயதுள்ள திருமதி._________ ஆகியோர் முதலாவது பார்ட்டியாகவும் (அடையாள அட்டை ______) (கைபேசி எண்.______) (தத்து எடுப்பவர்கள்)

______________________ விலாசத்தில் வசிக்கும் திரு._________ அவர்களின் குமாரர் சுமார் ___ வயதுள்ள திரு. _________ (அடையாள அட்டை ______) (கைபேசி எண்.______) மற்றும் திரு._________ அவர்களின் மனைவி சுமார் ___ வயதுள்ள திருமதி._________ இவர்கள் (அடையாள அட்டை ______) (கைபேசி எண்.______) (தத்து கொடுப்பவர்கள்)

ஆக நாம் இருபார்ட்டிகளும் சேர்ந்து ஏற்படுத்திக்கொண்ட தத்து எடுப்பு பத்திரம் என்னவென்றால்.

நம்மில் முதலாவது பார்ட்டியினருக்கு திருமணமாகி ______ ஆண்டுகளுக்கு மேலாகியும் இதுநாள்வரை யாதொரு மக்கட்பேறும் ஏற்படவில்லை. எனவே நம்மில் இரண்டாவது பார்ட்டிகளுக்கு ________ ஆம் ஆண்டு ஒரு பெண் குழந்தையும் _________ ஆம் ஆண்டு மற்றொரு பெண் குழந்தையும் ஆக மொத்தம் _________ பெண் குழந்தைகள் உள்ளனர். முதலாவது பார்ட்டிக்கு குழந்தை இல்லாத காரணத்தினால் இரண்டாவது பார்ட்டிக்கு பிறந்த முதல் பெண் குழந்தை _________ வை தத்து எடுக்க விரும்புவதாலும், இரண்டாவது பார்ட்டிகள் தத்து கொடுக்க சம்மதித்ததாலும், குடும்ப பெரியோர்கள் முன்னிலையிலும் ஆவணத்தில் கையொப்பம் இட்டுள்ள சாட்களின் முன்னிலையிலும் இரண்டாவது பார்ட்டிகளுக்கு _________ அன்று பிறந்த முதல் பெண் குழந்தை _________வை முதலாவது பார்ட்டியினருக்கு இன்றைய தேதியில் இரண்டாவது பார்ட்டி தத்தக் கொடுக்க முதலாவது பார்ட்டியின் குலவழக்கப்படி தத்து எடுத்துக்கொண்டனர்.

இதற்கு மேல் நம்மில் முதலாவது பார்ட்டியிடம் சுவீகாரமாக கொடுக்கப்பட்ட பெண் குழந்தைக்கும் இரண்டாவது பார்ட்டிகளுக்கும் எந்தவித சம்மந்தமோ பாத்தியமோ உரிமையோ தொர்போ கிடையாது.

எனவே மேற்படி ________ ( ) என்ற பெண் குழந்தையானது இனிமேல் முதலாவது பார்ட்டிகளின் சட்டப்பூர்வ தத்து குழந்தையாகும். மேற்படி முதலாவது பார்ட்டியினருக்கு மேற்படி _______ என்ற தத்து குழந்தையே சட்டபூர்வமான வாரிசாவாள். ______ என்ற பெண் குழந்தையே முதலாவது பார்ட்டிகளின் சகல சொத்துக்களுக்கும், இருப்புகளுக்கும், பொறுப்புகளுக்கும் கடைசிகால அந்திம கடமைகளுக்கும் சட்டபூர்வமான வாரிசாவாள்.

ஆக இந்தப்படிக்கு நாம் இரண்டு பார்ட்டிகளும் கீழ்கண்ட சாட்சிகள் முன்னிலையில் யாதொரு தூண்டுதலும்மின்றி மனப்பூர்வமான சம்மதத்தின் பேரில் கையொப்பம் செய்து ஏற்படுத்திக்கொண்ட தத்து எடுப்பு ஆவணம் இதுவே ஆகும்.